**செய்தி வெளியீடு எண்:352** **நாள் : 17.07.2015**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15.7.2015 அன்று தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை சார்பில் ஆழ் கடல் பகுதியில் மீன்பிடிக்க ஏதுவாக நவீன வசதிகளுடன் கூடிய சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 171 மீனவர் குழுக்களைச் சார்ந்த 580 மீனவர்கள் பயனடையும் வகையில் 51 கோடியே 30 லட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக 5 மீனவர்களுக்கு படகுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கி, இராமநாதபுரம் மாவட்டம் – தனுஷ்கோடி, முகுந்தராயன்சத்திரம், தங்கச்சிமடம், பாம்பன், டி.மாரியூர் மற்றும் வேதாளை ஆகிய இடங்களில் 44 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மீன் இறங்குதளங்கள் மற்றும் இராமநாதபுரத்தில் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மீன்வளத்துறையின் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடத்திற்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், 379 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்து, 198 கோடியே 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு 1 கோடியே 24 லட்சம் ரூபாய்க்கான மானியம் மற்றும் நலநிதி ஆகியவற்றை வழங்கினார்கள்.

ஆழ் கடல் பகுதியில் மீன்பிடிக்க ஏதுவாக நவீன வசதிகளுடன் கூடிய சூரை மீன்பிடி படகுகள் கட்டுவதற்கு மீனவர்களை ஊக்குவிக்கும் வகையில், புதிய சூரை மீன்பிடி படகு கட்டுவதற்கு ஆகும் உத்தேச செலவான 60 லட்சத்தில், இதுவரை எந்த மாநிலமும் வழங்காத அளவுக்கு இந்தியாவிலேயே முதன்முறையாக அதிகபட்சமாக 30 லட்சம் ரூபாய் மானியம் வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். இதன்படி, தேர்வு செய்யப்பட்ட 171 மீனவர் குழுக்களைச் சார்ந்த 580 மீனவர்களுக்கு 51 கோடியே 30 லட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக, சூரை மீன் பிடிபடகுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளை 5 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகளை நன்கு பராமரித்திடவும், மேம்பட்ட தரமான மருத்துவ சிகிச்சை கால்நடைகளுக்கு அளிக்கவும், இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா

அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது.

திருத்தி அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதி திட்டத்தின் கீழ் சந்தாதாரர்களுக்கு விபத்துக்களின் காரணமாக உடல் உறுப்புகள் இழப்பு ஏற்பட்டாலோ அல்லது இறப்பு ஏற்பட்டாலோ அந்நலநிதியிலிருந்து இழப்பீடு வழங்கப்படும். இத்திட்டத்தின்படி, 49 பயனாளிகளுக்கு 85 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் நலநிதி வழங்கும் அடையாளமாக ஒரு பயனாளிக்கு அதற்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

மேலும், மீன்பிடிப்பின்போது கடலில் காணாமல்போகும் மீனவர்களை தேடும் திறனை வலுப்படுத்தவும், தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தினை திறம்பட அமல்படுத்தவும் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் 38 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான மூன்று ரோந்து படகுகளை மீன்வளத் துறையின் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், அம்மாபாளையம் கிராமத்தில் ஆவின் நிறுவனம் மூலம் 72 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள அதிநவீன தானியங்கி இயந்திரங்கள் மூலம் நாளொன்றுக்கு 2.5 லட்சம் லிட்டர் பாலிலிருந்து 6.5 டன் வெண்ணெய், 5 டன் நெய் மற்றும் 20 டன் பால் பவுடர் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை;

கால்நடை பராமரிப்புத் துறை மூலம் பல்வேறு மாவட்டங்களில் 44 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1185 கிராம பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த சுமார் 11.90 லட்சம் கால்நடைகளும், எண்ணிலடங்கா விவசாயப் பெருங்குடி மக்களும் பயனடையும் வகையில், அறுவை சிகிச்சை அறை, ஆய்வக அறை, சிகிச்சைக் கூடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 237 கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

தஞ்சாவூர் மாவட்டம், நடுவூரில் 1 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உழவர் பயிற்சி மையக் கட்டடம்; திருவாரூர் மாவட்டம் – மன்னார்குடி, கரூர் மாவட்டம் – உப்பிடமங்கலம் மற்றும் பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர் ஆகிய இடங்களில் 1 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி நிலையக் கட்டடங்கள்;

கடலூர் மாவட்டம் – எம்.ஜி.ஆர் திட்டு, முடசலோடை மற்றும் சாமியார்பேட்டை; நாகப்பட்டினம் மாவட்டம்–நாகூர் மற்றும் செருதூர்; புதுக்கோட்டை மாவட்டம்–ஆர்.புதுப்பட்டினம் மற்றும் முத்துக்குடா; தூத்துக்குடி மாவட்டம்–திரேஸ்புரம், தருவை குளம் மற்றும் பெரிய தாழை; கன்னியாகுமரி மாவட்டம்–

சைமன் காலனி மற்றும் இணையம்புத்தன் துறை ஆகிய இடங்களில் 95 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 மீன் இறங்குதளங்கள்;

கடலூரில் 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடம்; காஞ்சிபுரம் மாவட்டம், ஆத்தூரில் 1 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் விதைப் பண்ணை; நாகப்பட்டினம் மாவட்டம், நாகூரில் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலைப்படுத்தப்பட்ட வெட்டாற்றின் முகத்துவாரம்;

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் சார்பில் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 2 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழிற் பயிற்சி மையம், கடல் உணவு அறிவு மையம், கடல்சார் பொறியியல் மற்றும் மாலுமிக்கலை பயிற்சி மையக் கட்டடங்கள்; திருவள்ளூர் மாவட்டம் – மாதவரம் பால்பண்ணையில், பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்போர் மற்றும் வண்ண மீன்கள் வளர்ப்போருக்குப் பயிற்சி அளிக்கவும், ஆராய்ச்சி மாணவர்களின் பட்ட மேற்படிப்புக்குப் பயன்படும் வகையிலும் 2 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன்வளப் பல்கலைக் கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடங்கள்; திருவள்ளூர் மாவட்டம் – பொன்னேரியில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டடங்கள்;

இராமநாதபுரம் மாவட்டம் – மண்டபம், சாத்தக்கோன்வலசையில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1 கோடியே 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கடல்மீன் குஞ்சு பொறிப்பகம்; கன்னியாகுமரி மாவட்டம் – கணபதிபுரம், ஆயிரங்கால் பொழிமுகத்தில் 1 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள நோய் தாக்காத நாட்டு இன தாய் இறால் வங்கி மையம்; கிருஷ்ணகிரி மாவட்டம் – பாரூரில் 1 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மண்டல மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நிலையம்;

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் திருநெல்வேலி மாவட்டம்–இராமையன்பட்டியில் 139.1 ஏக்கர் நிலப் பரப்பளவில், கல்லூரி நிர்வாகக் கட்டடம், மாணவியர் விடுதி, கல்வி வளாகங்கள், கோழி ஆய்வகம், கல்லூரி முதல்வர் குடியிருப்பு, பணியாளர்கள் குடியிருப்பு, விருந்தினர் இல்லம் உள்ளிட்ட வசதிகளுடன் 53 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்;

தஞ்சாவூர் மாவட்டம் – ஒரத்தநாட்டில் 177.92 ஏக்கர் நிலப் பரப்பளவில், கல்லூரி நிர்வாகக் கட்டடம், மாணவ, மாணவியர் விடுதிகள், பயிற்றுவிக்கும் கால்நடை பண்ணை வளாகம் உள்ளிட்ட வசதிகளுடன் 49 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – ஓசூரில் 23 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி;

விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் ராஜபாளையம் ஆகிய இடங்களில் 1 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; தேனியில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உழவர் பயிற்சி மையக் கட்டடம்;

என மொத்தம் 379 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் – தனுஷ்கோடி, முகுந்தராயன்சத்திரம், தங்கச்சிமடம், பாம்பன், டி.மாரியூர் மற்றும் வேதாளை ஆகிய இடங்களில் 44 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மீன் இறங்குதளங்கள் மற்றும் இராமநாதபுரத்தில் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மீன்வளத்துறையின் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், பெரம்பலூர் மாவட்டத்தினை தொழில் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றமடையச் செய்யும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக பெரம்பலூர் மாவட்டம் – பாடலூர் கிராமத்தில் நாளொன்றுக்கு ஒரு லட்சம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட 36 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பால் பண்ணை;

ஆவின் நிறுவன பால் மற்றும் உபபொருட்கள் நுகர்வோருக்கு ஏதேனும் குறையிருப்பின், அதனை உடனடியாக ஆவின் நிறுவனத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவும், உடனடியாக அந்தக் குறைகளைக் களைந்து சிறந்த சேவையை மக்களுக்கு வழங்கவும் சென்னை, நந்தனத்தில் அமைந்துள்ள ஆவின் வளாகத்தில் 31 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நுகர்வோர் நல மையம் மற்றும் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம்;

வேலூர் மாவட்டம் – ஆம்பூர், ஆற்காடு; விழுப்புரம் மாவட்டம் – மயிலம், செஞ்சி; கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் தெற்கு, பொள்ளாச்சி, சூலூர், கவுண்டம்பாளையம், மேட்டுப்பாளையம் ஆகிய இடங்களில் 70 கிராம பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த சுமார் 75 ஆயிரம் எண்ணிக்கையிலான கால்நடைகளும், லட்சக்கணக்கான விவசாயப் பெருங்குடி மக்களும் பயன்பெறும் வகையில், 2 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள 12 கால்நடை மருந்தகங்கள்; கோயம்புத்தூர் மாவட்டம் – கோவில்பாளையத்தில் 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்படவுள்ள கால்நடை மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூரில் 1 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பன்முக கால்நடை மருத்துவமனை;

கன்னியாகுமரி மாவட்டம்–இறையுமன்துறை மற்றும் தூத்தூர் ஆகிய இடங்களில் 12 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மீன் இறங்குதளங்கள்;

கடலூர் மாவட்டம் – பரங்கிப்பேட்டை, ஈரோடு மாவட்டம் – பவானிசாகர், திண்டுக்கல் மாவட்டம் – கொடைக்கானல், தேனி மாவட்டம் – வைகை அணை ஆகிய இடங்களில் 17 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள மீன்விதைப் பண்ணை கூடுதல் கட்டடங்கள்;

கன்னியாகுமரி மாவட்டம் – தேங்காபட்டினத்தில் 82 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கடலரிப்பு தடுப்புச் சுவர்; நாகப்பட்டினத்தில் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மீன்வளத் துறையின் ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம்; நாகப்பட்டினத்தில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்திற்கான நிர்வாகக் கட்டடம்;

என மொத்தம் 244 கோடியே 74 லட்சம் மதிப்பீட்டிலான கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைக்கான கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைகளின் சார்பில் அடிக்கல் நாட்டியும், திறந்து வைத்த திட்டங்கள் மற்றும் பல்வேறு திட்ட பயனாளிகளுக்கு வழங்கிய மானியம் மற்றும் உதவித் தொகை ஆகியவற்றின் மொத்த மதிப்பு 676 கோடியே 51 லட்சம் ரூபாய் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு டி.கே.எம். சின்னையா, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு கே.ஏ. ஜெயபால், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு பி.வி. ரமணா, தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தலைவர் திரு அ. மில்லர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., பால்வளத் துறை ஆணையர் திரு சுனீல் பாலீவால், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் திரு த. ஆபிரகாம், இ.ஆ.ப., மீன்வளத் துறை ஆணையர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 17.7.2015